# மான்மின் செய்திகள்

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## பரிசுத்த சுவிசேஷத்தின் மூலமாக ஜீவ அப்பத்துடன் சந்தோஷமான புதிய வருடம்

### அறிவர்.ஜேராக் லீ அவர்களின் புத்தகங்கள் ஆவிக்குரிய வளர்ச்சி மற்றும் ஆசீர்வாதத்திற்கு திறவுகோல்களாகும்




எதிர்பார்ப்பிலும் சிறகடித்து பறக்கும் இதயத்துடனும் நாம் புதிய வருடமாகிய 2013–னை வரவேற்றுள்ளோம். நம்முடைய வாழ்விலும்கூட பல எதிர்பாராத காரியங்களுடன், சமாதானத்தையும் ஆசீர்வாதத்தையும் தேவனுடைய சித்தத்தை தேடுவதாலும் அதை கைக்கொள்வதாலும் அனுபவிக்க முடியும். இந்த புதிய வருடமாகிய 2013–னிலும், நீங்கள் விசுவாசத்தில் வளர்ந்து, உங்கள் வாழ்வில் எப்போதும் ஜெயத்தை அடையப்பெற, பல வகையான மொழிகளில் இருக்கிற அறிவர்.ஜேராக் லீ அவர்களது புத்தகங்களை உங்களது ஆவிக்குரிய வழிகாட்டியாக அழைப்பீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

அறிவர். ஜேராக் லீ அவர்களது தேவ செய்திகள் தேவனுடைய வார்த்தையை அறிவாக போதிப்பதற்காக மட்டும் நோக்கம் கொள்ளவில்லை, அவைகள் மெய்யான விசுவாசம், கிரியைகளோடுகூட வெளிப்படும் என்பதையும் வலியுறுத்துகின்றன. அதாவது, மெய்யான விசுவாசம் தேவனுடைய வார்த்தையின்படி செயல்படுவதாகும். அவரது செய்திகள் முழுவதும் வேதாகமத்தின் அடிப்படையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பதால் பிரத்யேகதன்மை வாய்ந்ததாய் இருக்கிறது. அவைகள் ஆழமான ஆவிக்குரிய பொருளடக்கங்களை உள்ளடக்கியிருந்தாலும்கூட, அவைகள், படிப்பு, வயது அல்லது எவ்வளவு நீண்ட காலம் அவர்கள் கிறிஸ்தவர்களாய் இருந்துகொண்டு இருக்கிறார்கள் என்பதையெல்லாம் பாராமுகமாக எல்லாரும் புரிந்துகொள்ளும் அளவு எளிமையாய் இருக்கின்றன. அவைகள் தேவனுடைய அன்பையும்கூட மனிதர்களுடைய இருதயத்தின் ஆழத்தில் நாட்டுகின்றன.

தற்போது வரை வெளியிடப்பட்டுள்ள அவரது புத்தகங்கள் அனைத்தும் ஜீவ வார்த்தையில் வேறூன்றி உள்ளன. வாசகர்களுக்கு மெய்யான வாழ்வையும் கிருபையையும் தந்து, அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர உதவி செய்கிற அவைகளை அவர் ஆவியானவருடைய வெளிப்பாட்டில் பெற்றிருக்கிறார். கூடுதலாக, அப்புத்தகங்கள் நம்முடைய வாழ்வில் உள்ள பிரச்சனைகளுக்கு தீர்வை கொடுக்கவும், மனந்திரும்புதலின் கிரியைகளையும், சுகமாகுதலின் கிரியைகளையும்கூட கொண்டுவரவும் செய்கின்றன.

ஆக, அறிவர். லீ அவர்களது ஊழியத்தில் முக்கிய கருவியாயிருக்கிற வெளியீட்டு ஊழியம் தேவனுடைய அன்பை பரப்புவதில் முக்கிய பகுதியாக பங்கு வகிக்கிறது.

ஏப்ரல் 17, 1987 அன்று வெளியிடப்பட்ட அவரது சாட்சி புத்தகமான, மரணத்திற்கு முன் நித்திய வாழ்வு, துவங்கி, அறிவர். ஜேராக் லீ அவர்கள் கொரிய மொழியில் 80க்கும் அதிகமான புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அவரது கொரிய புத்தகங்களில் 38 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சடிக்கப்பட்டு சிறந்த விற்பனை புத்தகமாக சிலுவையின் செய்தி விளங்குகிறது. பரலோகம் I & II; நரகம்; விசுவாசத்தின் அளவு, ஆவி ஆத்துமா மற்றும் சரீரம் மற்றும் விழித்தெழு இஸ்ரவேலே ஆகியன உள்ளன.

அயல் நாடுகளில் உள்ள திருச்சபை அங்கத்தினர்களது வேண்டுகோளுக்கு இணங்க, 201 தனிப்பாகங்களான பல்வேறு மொழிகளில் உள்ள அவரது புத்தகங்கள், ஆங்கிலம், சீனம், ஜெர்மானியம், ரஷியம், பிரெஞ்சு, ஸ்பானியம், அராபிக் மற்றும் எபிரேயம் போன்ற 44 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன. தவிரவும், 218 தனிப்பாகங்களான அவரது புத்தகங்களும்கூட, 36 மொழிகளில் மின் தகடுகளாகவும் உள்ளன.

தற்போது, இப்புத்தகங்கள், அமெரிக்க ஐக்கியம், கனடா, இத்தாலி, தைவான், உக்ரெய்ன், எகிப்து, இந்தியா, இந்தோனேசியா மற்றும் மலேசியாவில் உள்ள 20க்கும் மேற்பட்ட வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டுள்ளன. அவர்கள் உலக முழுவதும் உள்ள பல புத்தக கடைகளிலும் உலகின் மிகப்பெரும் இணையதள புத்தக கடையான amazon.comமிலும் மற்றும் i புத்தக கடையிலும் விற்பனை செய்து கொண்டு இருக்கின்றனர். தற்போதைய நவநாகரீக போக்குடன் இணைந்து செல்வதற்கு முயற்சியாக e–புத்தகங்களும்கூட விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

2013ல், ஆவியில் வளர்வதற்கும் ஆசீர்வாதங்களை பெறுவதற்கும் இரகசியங்கள் நிறைந்துள்ள அறிவர்.லீ அவர்களது புத்தகங்களில் உள்ள வார்த்தையுடன் உங்களை நீங்கள் "போஷித்து" கொண்டு, இந்த ஆவிக்குரிய வேக ஓட்டத்தில் கானான் ஆலய நாட்களுக்காக நன்கு ஆயத்தமான பாத்திரங்களாக மாறுவீர்கள் என நம்புகிறோம்.

---

### அனல் பறக்கும் புதிய வெளியீடு

■ *கிறிஸ்தவ அடிப்படைகள்,* **கிறிஸ்தவராக முதல் அடி எடுத்து வைக்கும் நபருக்கான ஓர் விலையேறப்பெற்ற வெகுமதி**

இப்புத்தகம், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பிள்ளையாக மறுபிறப்படைந்த ஒரு நபர், முதிர்ச்சியடைந்த கிறிஸ்தவராக வளர்வதற்கு உதவும்படிக்கு, கிறிஸ்தவர்களுக்கான மிக அடிப்படை நிலையான அறிவு குறித்து பேசுகிறது. புத்தகத்திலிருந்து, "இயேசு மற்றும் இயேசுகிறிஸ்துவின் நாமங்களின் பயன்பாட்டில் உள்ள வித்தியாசங்கள்", "நாம் இரட்சிக்கப்படுவோம் இந்த விசுவாசத்தால் மற்றும் இந்த விசுவாசத்தால் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்", "ஜெபிப்பதற்கான சரியான வழி முறைகள்", "ஆசீர்வாதத்தை பெறுவதற்கான திறவுகோல்" மற்றும் "துர்உபதேசம் என்பதின் வரையறை" போன்ற புதிய விசுவாசிகள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய குறிப்புகளை நீங்கள் கற்கலாம். இது ஆத்துமாக்களை மேய்க்கும் திருச்சபை ஊழியர்களும் புதிய விசுவாசிகளும்கூட கட்டாயம் வாசிக்க வேண்டியதொன்று.

■ **இளையவர் வேதபாட புத்தகம் 1**

***வேதாகமத்தின் மாபெரும் கதாபாத்திரங்களின் நற்குணம்***

இப்புத்தகம் விசுவாசத்தின் முற்பிதாக்களுடைய நற்குணத்தை புகைப்படங்களுடன் காண்பிக்கிறபடியால் இப்புத்தகத்தை அது மிகவும் சுவாரசியமாக்குகிறது. இது சிறு பிள்ளைகளை, தேவனால் அங்கீகரிக்கப்படும் நற்குணத்தை புரிந்துகொள்ளும்படியும் அதை அடையப்பெறும்படியும் வழி நடத்துகிற ஒரு முக்கியமான வழிகாட்டி புத்தகமாகும்.

■ **சிறுபிராயத்தவர் வேத பாட புத்தகம் 2**

*அப்போஸ்தலர் யோவானால் கொடுக்கப்பட்ட, ஆண்டவருடைய அடிச்சுவடுகள் I*


இந்த புத்தகம் அறிவர்.ஜேராக் லீ அவர்களது ஆண்டவருடைய அடிச்சுவடுகள், யோவான் சுவிசேஷத்திலே கொடுக்கப்பட்ட பிரசங்கங்கள் அடங்கிய புத்தகத்தின் அடிப்படையிலானதாகும். இது துவக்கத்தை குறித்த இரகசியம், இயேசுவின் உற்பத்தி ஸ்தானம், மனுகுலத்தின் இரட்சிப்பிற்கான அநாதி தீர்மானம் ஆகியவற்றை கொண்டுள்ளது. இது 12 அத்தியாயங்களை உடையதாயும், யோவான் சுவிசேஷ புத்தகத்தின் ஒவ்வொரு வசனங்களுக்கான வியாக்கியானத்தையும், புனித பயணத்தின் புகைப்படங்களையும் கொண்டுள்ளது.

**மான்மின் ஊழியங்கள் இந்தியா: +91–44–26172471**

மேலும் டாக்டர். ஜேராக் லீ அவர்களுடைய புத்தகங்கள் OM books, Word of Christ, ELS மற்றும் Hebron Literature Service ஆகிய இடங்களிலும் கிடைக்கும்.

---

### புகைப்பட செய்தி



மான்மின் மத்திய திருச்சபை 2013க்கான தனது திறப்பு கூட்டத்தை ஜனவரி 2, 2013 அன்று அறிவர். ஜேராக் லீ அவர்களுடன் நடத்தியது. இப்போது, 2013 ஜனவரி மாதத்திற்கு, மான்மின் மத்திய திருச்சபையில் உள்ள போதகர்கள் மற்றும் லேவி ஊழியர்களின் எண்ணிக்கை 900க்கும் மேல் உள்ளது.



# இறுதி காலத்திற்கான அநாதி தீர்மானம்

"(தேவன்) எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4).

தேவன் அன்பாகவே இருக்கிறார், ஆகவே அவர் 700 கோடிக்கும் அதிகமாகும் ஜனத்தொகையினரான எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்படவும், பரிசுத்த சுவிசேஷத்தை கேட்கவும், இரட்சிப்பை அடையவும், சத்தியத்தை அறியவும் வேண்டும் என விரும்புகிறார். இந்த கடைசி காலத்திற்கான அநாதி தீர்மானம், இயன்றவரையில் எல்லா மனிதரையும் இரட்சிப்பிற்குள் வழிநடத்த விரும்பும் தேவனுடைய திட்டத்தை குறிக்கிறது. ஆகவே, 2013ல் இறுதி கால தீர்மானத்தை முழுவதும் பூரணமாக நிறைவேற்றுவதற்கு மீண்டும் நம் இதயத்தை தீர்மானித்து கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்?

### 1. "மான்மின்" என்ற பெயரில் அடங்கியுள்ள தேவனுடைய அன்பு.

பிதாவாகிய தேவன் 'மான்மின்' என்று அர்த்தங்கொள்ளும் 'சகல தேசம்' அல்லது 'சகல ஜன(ம்)'–த்தை காப்பாற்றுவதற்கு இத்திருச்சபையின் மூலம் தம் அன்பை வெளிப்படுத்த விரும்புகிறார். அதனால்தான் அவர் இத்திருச்சபைக்கு மான்மின் திருச்சபை என்று பெயரிட்டார். நான் வேதபாட கலாசாலையிலே 37 வயதில் நுழைந்தபடியால், நான் முதல் வருட மாணவனாயிருந்த காலத்திலிருந்தும்கூட திருச்சபையை திறப்பதற்கு ஆயத்தம் செய்தேன். குறிப்பாக நான் தேவன் தாமே எனது சபைக்கு பெயரிடவேண்டும் என தேவனிடம் ஜெபித்து கொண்டிருந்தேன். மூன்று வருடங்கள் கழித்து, நான் திருச்சபை ஆரம்பிப்பதற்கு சற்று முன் தேவன் எனக்கு பதிலளித்தார். தேவன், "திருச்சபைக்கு 'மான்மின் திருச்சபை' என்று பெயரிடு" என்று சொன்னார்.

இறுதி காலத்தில் அவருடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு, அவர் இந்த திருச்சபையை ஏற்படுத்தி அதற்கு "மான்மின் திருச்சபை" என்று பெயரிட்டார். திருச்சபை ஆரம்பத்தில் நாங்கள் திருச்சபைக்கு மான்மின் திருச்சபை என்று பெயரிட்டோம். ஆனால் நாங்கள் பல கிளைசபைகளை கொண்டிருக்க எதிர்பார்த்தபடியால், அதற்கு "மான்மின் மத்திய திருச்சபை" என்று மறுபெயரிட்டோம். மேலும் தற்போது, இத்திருச்சபை 10,000 கிளை மற்றும் இணை சபைகளை உடையனவாயிருக்கிறது.

மான்மின் அங்கத்தினர்களை மட்டுமல்ல, ஆனால் உலகத்திலுள்ள சகல ஜனங்களையும் இரட்சிப்பதற்கு, மாபெரும் அநாதி தீர்மானம் ஏற்கனவே பிதாவின் இருதயத்தில் இருந்தது. அவருடைய இருதயத்தில் வைக்கப்பட்டிருந்த இறுதி காலத்திற்கான தீர்மானத்தை ஊக்கமாய் வெளிப்படுத்த வேண்டிய காலம் இதுவாயிற்று. ஒரு விதத்தில் இதுவரைக்கும் தேவன் முன் ஆயத்த வேலைகளை மட்டும் செய்திருக்கிறார். எல்லா ஜனங்களையும் இரட்சிக்கும்படிக்கு, அநாதி தீர்மானத்தை ஊக்கமாக வெளிப்படுத்துவது என்பது பரந்த ஆவிக்குரிய யுத்தகளத்தை துவங்குவதாய் இருக்கிறது.

ஒரு யோகிதையுள்ள இராணுவ தளபதி யுத்தத்திற்கு முன்னே சிறந்த ஏற்பாடுகளை செய்வான். நீங்கள் முதலாவது, சிறந்த ஆயுதத்தை ஆயத்தம் செய்யவேண்டும். கூடுதலாக, உங்களது போர்ச்சேவகர்கள் சிறப்பாக பயிற்சி பெற்றிருக்கவேண்டும். அவர்கள் தங்களது ஆயுதங்களை திறம்பட கையாள கூடியவர்களாக இருக்கவேண்டும். அவர்கள் யுத்த தந்திரங்களையும் புரிந்துகொள்ள கூடியவர்களாய் இருக்க வேண்டும்.

மேலும், அவர்கள் தங்களது அதிகாரியின் கட்டளைக்கு கீழ்ப்படிய ஆயத்தமாய் இருக்க வேண்டும். அதாவது இராணுவ ஒழுங்குமுறை நன்கு ஸ்தாபிக்கப்பட வேண்டும். இவற்றிற்கு மேல், போர்ச்சேவகர்கள் நிச்சயமாக ஜெயம் பெறுவதற்கு தன்நம்பிக்கையுடையவர்களாய் இருக்கவேண்டும். இதே காரியங்கள் ஆவிக்குரிய யுத்தகளத்திற்கும் பொருந்தும். ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு நீங்கள் எந்தளவாய் மாபெரும் வாஞ்சையுள்ளவர்களாய் இருக்கிறீர்களோ, அந்தளவாய் நீங்கள் உங்களை நன்கு ஆயத்தம் செய்யவேண்டும் (எபேசியர் 6: 12–13).

### 2. இறுதி காலத் தீர்மானத்திற்கான தேவனுடைய ஆயத்தம்.

முதலாவதாக, தேவன் நாம் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்காக மிக உயரிய நிலை கருவிகளுடன் நமக்கு வேண்டியவைகளை கொடுத்து ஆயத்தம்பண்ணினார்.

ஆத்துமாக்களை இரட்சிக்க எது அத்தியாவசியமான கருவி? அது தான் எபேசியர் 6:17–ல் எழுதப்பட்டுள்ளது போல "ஜீவனுள்ள வார்த்தை"யாய் இருக்கிறது. எதிராளியாகிய பிசாசான சாத்தானுடைய பொல்லாத சதி திட்டங்களை ஊடுருவுகிற தாக்குதல் ஆயுதம் "தேவனுடைய வார்த்தையே".

ஒரு ஆவிக்குரிய போராளியாக ஆவிக்குரிய யுத்த களத்திற்குள் போக, நீங்கள் உங்களை ஆவியில் தேவனுடைய வார்த்தையால் தரிப்பித்துக்கொள்ளவேண்டும். அதாவது, நீங்கள் வார்த்தையை புரிந்துகொண்டால் மட்டும் போதாது, ஆனால் நீங்கள் வார்த்தையின்படி வாழ வேண்டும். அப்படி செய்தால் மட்டுமே நீங்கள் ஆவிக்குரிய ரீதியில் தைரியமாய் இருந்து பயமில்லாமல் யுத்தத்திற்கு போகமுடியும். மாம்சீக ரீதியிலும் கூட, கத்தி சண்டையில் வல்லவன் எப்போதும் பட்டயத்தோடு இருக்கவேண்டும் என சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு ஆவிக்குரிய யுத்த வீரனும் வார்த்தையாகிய பட்டயத்தோடு இருக்க வேண்டும்.


அதோடு 'தேவனுடைய வார்த்தை' தான் "ஜீவ அப்பம்". நாம் இரட்சிக்க வேண்டிய ஆத்துமாக்களை இதனால் போஷிக்கிறோம். பின், ஆமோஸ் 8:11 இவ்விதமாய் கூறுகிறது. "இறுதிகாலத்தில், இதோ... ஆகாரக்குறைவினால் உண்டாகிய பஞ்சமல்ல, ஜலக்குறைவினால் உண்டாகிய தாகமுமல்ல, கர்த்தருடைய வசனம் கேட்க கிடையாத பஞ்சத்தை அனுப்புவேன்" தேவனிடத்தில் நான் எண்ணற்ற உபவாச ஜெபத்தை ஏறெடுத்தேன், பிதாவாகிய தேவன் இத்திருச்சபைக்கு "ஐந்து மடங்கு பரிசுத்த சுவிசேஷத்தை" கொடுத்தார். அவர் மரித்துபோய் கொண்டிருக்கிற ஆத்துமாக்களை உயிர்ப்பிக்கும் வார்த்தைகளையும், உங்கள் ஆத்துமாவை செழிக்க ஆசீர்வதிக்கும் வார்த்தைகளையும், இத்திருச்சபைக்கு அபரிதமாக கொடுத்துள்ளார்.

கூடுதலாக, ஐந்து மடங்கு பரிசுத்த சுவிசேஷம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தை என்று நிரூபிக்க அவர் 'வல்லமை' தந்துள்ளார். தேவனுக்கு உரியதான வல்லமையை தேவன் எனக்கு தந்தபடியால், நான் எண்ணற்ற அடையாளங்களையும், அதிசயங்களையும் வெளிப்படுத்த முடிந்தது. மேலும், கூடுதலாக, இத்திருச்சபை இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்கள் தங்களது பரிசுத்த ஆவியின் நிறைவை தக்கவைத்து கொள்ளவும், தங்களது விசுவாசத்தில் வளரவும் ஊக்கமான ஜெபமும் கிருபை நிறைந்த பாடல்களும் கொண்டிருக்கிறது. மேலும் இத்திருச்சபை, 12 அயல் நாட்டு படைமுயற்சி கூட்டங்கள் மற்றும் 3 வருட கால இஸ்ரேல் ஊழியத்தின் மூலமாக உலகளா

















அறிவர்.ஜேராக் லீ அவர்கள் சிருஷ்டிகராகிய தேவன் உயிரோடிருக்கிறார் என்றும், இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டுமே நம்முடைய இரட்சகர் என்றும் முழு உலகத்திற்கும் தைரியமாய் பிரகடனப்படுத்தினார். வேதாகமம் நிஜம் என்று நிரூபித்த அற்புத அடையாளங்கள் மற்றும் வல்லமையான கிரியைகள்!












உலகின் பல இடங்களில் அயல்நாட்டு படைமுயற்சி கூட்டங்களை நடத்தி, அறிவர்.ஜேராக் லீ அவர்கள் வேதாகமத்தின் நிஜரூபத்திற்கு சாட்சியமிட்டு சிருஷ்டிகராகிய தேவன் ஜீவிக்கிறார் என்றும், இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டுமே நம்முடைய இரட்சகர் என்றும் முழங்கினார்.

அவரது ஜெபத்தினால், குருடர் பார்த்தனர், செவிடர் கேட்டனர், ஊமையர் பேசினர், முடவர்கள் எழுந்து குதித்து நடந்தனர். புற்றுநோய், எய்ட்ஸ் உட்பட பல வகையான வியாதிகள் சொஸ்தமாயின. மேலும், அவரது ஜெபம் புயலை மறைய செய்தது, பயங்கர பஞ்சத்தில் பாதிக்கப்பட்ட தேசங்களில் மழை பொழிந்தது. எண்ணற்ற ஆச்சர்யமான அடையாளங்கள், அற்புதங்கள் மற்றும் வல்லமையான கிரியைகள் வெளியாகி தேவனுக்கு மகிமை செலுத்தின.







## விசுவாச அறிக்கை

1 மான்மின் மத்திய திருச்சபை, வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்டபரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2 மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியை களையும் நம்புகிறது. பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால்மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4 மான்மின் மத்திய திருச்சபை, இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும்,பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5 மான்மின் மத்திய திருச்சபை, உறுப்பினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடி வரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை, "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து அதின் சொற்படியான உள்ளடகத்தை நம்புகின்றனர்.
"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் (தேவன்)" அப்போஸ்தலர் (17:25).
"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை"
அப்போஸ்தலர் (4:12).

மான்மின் சர்வதேச பாடசாலை
இந்திய வளாகம்

Manmin International Seminary - India campus belongs to the United Holiness Church of Korea of which the chairman of the board of directors is Rev.Dr. Jaerock Lee. It is based on the fivefold Holiness gospel: Regeneration, Sanctification, Divine Healing, Resurrection, and Return of Christ.

DIPLOMA IN CHRISTIAN MINISTRY

(One year correspondence programme)

15D/41, Ponnankinaru Street, Villivakkam, Chennai - 600 049.
Tel:044 - 26172471, Email : indiamis@gmail.com

விய பணித்தளத்திற்கு செல்ல ஆரம்ப வழியை ஏற்கனவே கண்டுள்ளது. ஒளிபரப்பு மற்றும் வெளியீட்டு ஊழியத்தின் மூலமாக உலகளாவிய மாகாணத்திற்கான சாத்திய கூறுகளை நாங்கள் கண்டுள்ளோம்.

பிதாவாகிய தேவன் இத்திருச்சபை ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கு சிறந்த கருவிகளை கொண்டு இந்த வழிகளில் ஆயத்தமாகும்படி அனுமதித்துள்ளார். இதை யுத்தத்திற்காக ஆயத்தம் செய்வதோடு ஒப்பிடுகையில், இது பல நிலைகளையுடைய கலைநுட்ப ஆயுதங்களுடன் தரிக்கப்பட்டிருக்கும் நிலையே ஆகும்.

**இரண்டாவதாக, பிதாவாகிய தேவன் அங்கத்தினர்கள் ஆவிக்குரிய ரீதியில் வளர்வதற்கு உதவினார்.**

இறுதி காலத்தின் அநாதி தீர்மானத்தை முற்றிலும் நிறைவேற்றுவதற்கு நாம் ஆவிக்குரிய ரீதியில் வளர பிதாவாகிய தேவன் நமக்கு உதவி செய்தார். பிதாவாகிய தேவனுக்கு இது எத்தனை முக்கியத்துவம் வாய்ந்தது என்று தெரிந்திருந்தபடியால், அவர் இத்திருச்சபையை 2011 முதல் அதிதீவிர ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓடும்படி அனுமதித்தார். தங்களது விசுவாசத்தை உண்மையாய் காத்துக்கொண்டவர்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை தீவிரமாக்க இந்த அதிதீவிர ஆவிக்குரிய ஓட்டத்தில் ஓட முடிந்தது.

பல பாவங்களை செய்து அநீதியாய் செயல்பட்டவர்களும் இருந்தனர். அந்த நேரத்தில், மேய்ப்பனாக நான் அவர்களுக்கான உத்திரவாதத்தை ஆழமாய் உணர்ந்தேன், மேலும் மனந்திரும்ப விரும்பும் அங்கத்தினர்களின் பாதுகாப்பாளனாக என் உயிரை பணயம் வைத்து பரிந்துரை ஜெபத்தை அவர்களுக்காக ஏறெடுத்தேன். பின்பு, பிதாவாகிய தேவன் அவர்களுக்கு நேராய் மாபெரும் மன்னிப்பின் இரக்கத்தை தந்தார். அவர் அவர்களுக்கு ஆவியை வாஞ்சிக்கும் இதயத்தையும் கொடுத்தார். ஆகவே, 2011ல், அங்கத்தினர்கள் தன்னார்வமாய் வார்த்தையால் தங்களை தரிப்பித்துக் கொண்டனர், மேலும் ஜெபத்தை அனுபவிக்கும் இதயத்தை அவர்கள் கொண்டிருக்கலானார்கள்.

2012ல் ஆவியின் ஓட்டம் 2011ஆம் ஆண்டை பார்க்கிலும் சற்று வித்தியாசமாய் இருந்தது. அவர்களது விசுவாசம் 2011ல் கூர்மையாக வளர்ந்தது. ஆனால், அது 2012ல் மெதுவாக வளர்ந்தது, இதன் காரணம் 2012ல் அவர்கள் தங்கள் விசுவாசத்தை பெலப்படுத்துவற்கேதுவாக பிதாவாகிய தேவன் ஆவியின் பொழிதலை நடத்தினார். இது பிதாவாகிய தேவனுடைய வார்த்தை மெதுவாய் நிறைவேறுவது போல காட்சியளித்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில், பிதாவாகிய தேவன், அவர்கள், மேய்ப்பருடைய வார்த்தையை விசுவாசித்தார்களா அல்லது சந்தேகப்பட்டார்களா என்று கவனித்து பார்த்தார். எப்படி ஆபிரகாம் கொடுக்கப்பட்ட எந்த சூழ்நிலையிலும் வாக்குத்தத்த வார்த்தையை சந்தேகப்படவில்லையோ, அது போன்ற விசுவாசத்தை நம் அங்கத்தினர்கள் உடையவர்களாய் இருக்கவேண்டும் என்று பிதாவாகிய தேவன் விரும்பினார்.

அதே நேரத்தில், அவர்கள் மேய்ப்பரோடு அன்பில் ஒன்றாக வேண்டும் என்று தேவன் விரும்பினார். மெய்யாகவே தேவனை நேசிப்பவர்கள், மெய்யாகவே மேய்ப்பரையும் நேசிக்கிறவர்கள், இயல்பாகவே மேய்ப்பருடைய பாரத்தை அவருடன் சுமக்க விரும்புவர். கடந்த 30 வருடங்களில் எந்த வருடத்திலும் இல்லாத அளவிற்கு, 2012ல் அவர்கள் இருதயமானது கூடினது என்று தேவன் சொன்னார். 2012ல், தங்கள் இருதயத்தையும் சிந்தையையும், தங்கள் மேய்ப்பருக்கு பெலனாக மாற்றவேண்டும் என்று ஒன்று திரட்டியவர்கள் எண்ணிக்கையில் பெருபாலராய் இருந்தனர். 2012 ஆம் ஆண்டு இப்படிப்பட்ட வழிகளில் ஆசீர்வாதமான ஆண்டாய் இருந்தது.

பிதாவாகிய தேவன் ஒவ்வொரு தனிநபரது நம்பிக்கையையும் அன்பையும் இவ்விதமாக அளந்தார். அளவிற்கேற்றபடி பரத்திலிருந்து ஆவிக்குரிய விசுவாசத்தை அவர்களுக்கு தந்தார். குறிப்பாக, அந்த விசுவாச ஊழியர்கள் 2012ல் ஆவியின் பொழிதலில் பல ஆற்றலை பெற முடிந்தது. அவர்கள் தங்கள் இருதயத்தையும் ஞானத்தையும் ஒன்று திரட்டி, கஷ்டங்களை கடந்ததால், கானான் ஆலய சகாப்தத்தை நடத்துவதற்கு ஆற்றலுடன் இப்போது ஆயத்தப்பட்டுள்ளனர்.

**3. இரட்சிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கையை உயர்த்துவதற்கு பிரயோகிக்கப்பட்ட ஆவிக்குரிய சட்டம்.**

எந்தளவாய் ஆவிக்குரிய மனிதர்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறதோ, அந்தளவாய் நாம் எல்லா மனிதரும் இரட்சிக்கப்பட விரும்பும் தேவனுடைய இருதயத்தை வெளிப்படுத்தும் இறுதி காலத்திற்கான அநாதி தீர்மானத்தை அதி தூய்மையாய் அடையப்பெற முடியும். இதன் காரணம் ஒளி எவ்வளவாய் பிரகாசிக்கிறதோ அவ்வளவாய் இருள் பெலவீனமாகும். ஆகவே, பாவமும் தீமையும் தாண்டவமாடுகிற மற்றும் ஆவிக்குரிய ரீதியில் மிகவும் இருளடைந்திருக்கிற இந்த உலகத்தில் இத்திருச்சபை எழுந்து பிரகாசிக்க நமக்கு ஆவிக்குரிய மனிதர்கள் அநேகர் வேண்டும்.

நேரம் வரும்போது, ஆவிக்குரிய மனிதர்கள் தங்கள் நடுவில் மேய்ப்பருடன் முழுவதுமாய் வெளிச்சத்தை பிரகாசிப்பார்கள். இதன் விளைவாக, பாவத்திலும் தீமையிலும் வாழ்கிறவர்கள் இரட்சிக்கப்படும்படி அதிக வாய்ப்பை பெறுவார்கள். எந்தளவாய் நீங்கள் ஆவிக்குரிய மற்றும் பூரண ஆவிக்குரியவர்களாய் மாறுகிறீர்களோ அந்தளவாய் ஆத்துமாக்கள் பலர் இரட்சிக்கப்படும் வாய்ப்பை பெறுவார்கள். இது தான் ஆவிக்குரிய மண்டலத்தின் கணக்கு வழக்கு.

ஆகவே, உங்கள், சொந்த மகிமைக்காக மட்டுமல்ல அநேக ஆத்துமாக்கள் இரட்சிப்பை பெறுவதற்கான நீதியை நீங்கள் சந்திக்கும்படி நீங்கள் ஆவிக்குள் வர வேண்டும். உங்களது மேய்ப்பனாக, எனது தியாகத்தினாலும் அர்ப்பணத்தினாலும் அநேக அங்கத்தினர்கள் இரட்சிப்பின் வாய்ப்பையும் ஆவியின் பொழிதலில் ஓடும் கிருபையையும் பெற்றனர்.



தலைமை போதகர் டாக்டர். ஜேராக் லீ

இப்போது, நீங்கள் பங்கு எடுக்க வேண்டிய நேரம். நீங்கள் செய்ய வேண்டுவதெல்லாம் உங்கள் கடமையான வேலையை செய்யவும், ஆவிக்குள்ளாகவும் பூரண ஆவிக்குள்ளாகவும் வர அர்ப்பணம் கொண்டு இருக்க வேண்டும். பின்பு, பாவம் மற்றும் தீமையின் இருளில் மரித்துக் கொண்டிருக்கும் அந்த ஆத்துமாக்கள் வெளிச்சத்தை கண்டுபிடிக்கலாகி இருளிலிருந்து வெளியே வருவார்கள். இதன்விளைவாக, இறுதி காலத்தில் இயன்றவரையில், அநேக ஆத்துமாக்களை இரட்சிக்க விரும்பும் தேவனுடைய அநாதி தீர்மானத்தை நீங்களும் அடையப் பெறலாம்.

ஆகவே, நீங்கள் கடமையுணர்வோடு ஆவிக்குள்ளாக, பூரண ஆவிக்குள்ளாக வருவீர்கள் என்று உங்களை ஆசீர்வதிக்கிறேன். நீங்கள் ஒன்றாக இணைந்து தேவனுடைய அநாதி தீர்மானத்தை நிறைவேற்றி மகிமையின் வரிசையிலே ஒன்றாக இணைந்து நிற்கும்படியாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஜெபிக்கிறேன்!




2002 Honduras Miracle Healing Crusade
2002 ஹோன்டுராஸ் அற்புத சுகமளிக்கும் படைமுயற்சி கூட்டம்



2003 Russia Miracle Festival
2003 ரஷ்யா அற்புத திருவிழா



2004 Germany Miracle Festival
2004 ஜெர்மனி அற்புத திருவிழா



2004 Peru Healing Crusade
2004 பெரு சுகமாகும் படைமுயற்சி கூட்டம்



2006 DR Congo Miracle Healing Festival
2006 DR காங்கோ அற்புத சுகமளிக்கும் திருவிழா



2002 India Miracle Healing Prayer Festival with a total of three million people in attendance
2002 இந்திய அற்புத சுகமளிக்கும் ஜெபத்திருவிழாவில் மொத்தம் 30 இலட்சம் மக்கள் பங்கு பெற்றனர்.



2006 New York Crusade
2006 நியூயார்க் படைமுயற்சி கூட்டம்



2009 Israel United Crusade
2009 இஸ்ரேல் ஐக்கிய கூட்டம்

# தேவ ஞானத்துடன் உலகை பார்க்கும் ஒரு சட்ட நிபுணராகும் கனா




**சகோதரி ஃஹன்பிட் லீ**
(வெளியுறவு படிப்பில் ஹன்குக் பல்கலை கழகத்தின் மூத்த மாணவி, 3வது இளம் வயதினர் பணித்தளம்)

ஜூன் 1989ல், 8வது மாத கர்ப்பப் பருவத்தில் நான் பிறந்தேன். நான் 1.8கி.கி (3.91b) மட்டுமே இருந்தேன். சிறிது நேரம் நான் அடைகாக்கும் சாதனத்தில் வைக்கப்பட்டு இருந்தேன். நான் பலமுறை கிட்டத்தட்ட மரண விளிம்பின் அனுபவத்திற்கு சென்றிருக்கிறேன் என்று சொல்லக் கேட்டேன். ஆனால் எனது தாயார் மூத்த கண்காணியை.க்வாங்பன் கிம் அவர்கள் தங்களது மேலோட்டமான கிறிஸ்தவ வாழ்வை கண்ணீர் விட்டு கதறி அறிக்கை செய்தபின்னர், நான் தேவனுடைய கிருபையால் சுகம்பெற்றேன். பின் தொடர்ந்த ஆண்டில், அவர்கள் மான்மின் மத்திய திருச்சபையில் பதிவு செய்தார்கள். நான் தலைமை போதகர். ஜேராக் லீ அவர்களது செய்திகளை கேட்டும், அவரது வல்லமையான கிரியைகளை கண்டும், அனுபவித்தும் வளர்ந்தேன்.

## விசுவாசத்துடன் மட்டுமே தேசிய சட்ட நிபுணர்களின் கழக ஆரம்ப பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன்

பிப்ரவரி 2008ல், நான் ஹன்குக் வெளியுறவு படிப்பு பல்கலை கழகத்தில் சட்டத்துறை மாணவியாக சேர்ந்தேன். என் தகப்பனார், சகோதரர் இல்ஹோலீ, அவர்கள் நான் சட்ட நிபுணர்களின் பரீட்சையை எடுக்கும்படி ஆலோசனை கூறினார். ஆகவே நான் டிசம்பர் 2009 முதல் அதற்கு ஆயத்தமானேன். 2010ல் பள்ளியிலிருந்து விடுமுறை படிவத்தை சமர்ப்பித்தேன். அந்நாட்களில், 'சட்ட பள்ளி', அமெரிக்க மேற்படிப்பு முறையுடன் நெருக்கமாக ஒழுங்குப்படுத்தப்பட்டிருந்தது. மேலும், அது, முன் இருந்த சட்ட நிபுணர்களின் பரீட்சையிலிருந்து, தாக்கு பிடித்து இருந்த தேர்வு பெற்றவர்களின் எண்ணிக்கையை குறைத்தது. ஆகவே, நான் எனது இலட்சியத்தை சற்று மறு பரீசீலனை செய்து என் சூழ்நிலையை நினைக்க வேண்டியிருந்தது. ஆனால் நான் இறுதியாக சட்ட நிபுணர்களின் பரீட்சைக்கு ஆயத்தமாக தீர்மானித்தேன்.

ஆரம்பித்தபோது, என் சூழ்நிலை சரியில்லை. எனது குடும்ப பொருளாதார நிலை காரணமாக, என்னால் பிரபல்ய பேராசிரியர்களின் வகுப்பையோ அல்லது இணையதள பேரூரைகளையோ கேட்க முடியவில்லை. நான் பழைய புத்தக கடைகளிலிருந்து பேரூரைகள் இருந்த கேசட் டேப்புகளை வாங்கினேன். ஆகவே நான் இப்பரீட்சைக்கு ஆயத்தப்பட்ட மற்ற மாணவர்களை காட்டிலும் குறைவான வேகத்திலேயே படிக்க நேர்ந்தது. இருப்பினும், அதைக்குறித்து நான் முறுமுறுக்கவில்லை அசௌகரியமாகவும் உணரவில்லை. தேவன் என்னோடிருந்தால் எதையும் நான் சாதிக்க முடியும் என்று மனம்மாற்றப்பட்டு இருந்தேன். ஆகவே எதுவும் என்னை பாதிக்கவில்லை.

பகல் நேரத்தில் படித்தேன். இரவு நேரத்தில் நாளொன்றுக்கு, அரசியல் சட்டதிட்டத்தின் அடிப்படைகள், தேசிய சட்டம், குற்றப்பிரிவு சட்டம், நீதி முக்கியத்துவத்திலே ஆய்வு மற்றும் முந்தைய பரீட்சைகளிலிருந்து உதாரண கேள்விகள் உட்பட 10 கேசட் டேப்கள் கேட்டேன். இதன்விளைவாக, ஏப்ரல் 2011ல், நான் 53வது தேசிய சட்ட நிபுணர் கழகத்தின் ஆரம்ப பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன். என்னை கவனித்து எனக்கு உற்சாகம் தந்த தேவனுடைய அன்புக்காக மிகவும் நன்றியுள்ளவளாக உணர்ந்தேன்.

## இறுதியாக, தேசிய சட்ட நிபுணர்கள் கழகத்தின் பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன்

ஆரம்ப பரீட்சையின் முடிவு எதிர்ப்பார்த்ததை காட்டிலும் சிறப்பாக இருந்ததால், எனக்கு நம்பிக்கை வந்தது. ஆகவே, 2011 ஜூனில் இரண்டாம் சுற்று சட்ட நிபுணர்களின் பரீட்சையை எடுத்தேன். ஆனால் நன்கு ஆயத்தம் செய்ய போதிய கால அவகாசம் இல்லாததால் அதில் தோல்வியடைந்தேன். அதிலிருந்து, பிதாவாகிய தேவன் என்னை ஆசீர்வதித்து, எனது சூழ்நிலைகளை கட்டுப்படுத்தியதால், நான் படிப்பில் மட்டும் கவனம் செலுத்த முடிந்தது.

நவம்பர் 2011ல், நான் ஏற்கனவே முதல் சுற்று பரீட்சையில் தேர்ச்சி பெற்றிருந்தேன். ஆகவே, அதில் சேர்வதற்கு எந்த வழிமுறையும் இல்லாமல், ஆனால் குழுவின் மூத்த இயக்குனரின் ஆலோசனையின் பேரில், நான் ஹன்குக் வெளியுறவு படிப்பு பல்கலை கழகத்தால் ஒழுங்குப்படுத்தப்பட்ட "யுஹியாங்ஜே" என்ற சட்ட நிபுணர் பரீட்சைக்கான ஆயத்த குழுவில் சேர்ந்தேன். அதில் சேர்ந்ததால், பரீட்சை மற்றும் படிப்பது எப்படி என்பது குறித்தும் தகவல் அறிந்துகொள்ள பல வாய்ப்புகளை பெற்றேன். கூடவே, எனது பள்ளி, பள்ளிக்கு அருகாமையிலுள்ள ஒலி பதிவு அறையை கொடுத்து பயணிப்பதில் நான் செலவழிக்கும் நேரத்தை குறைக்க உதவியது. எனது பள்ளி இலவசமாக பேரூரை புத்தகங்களை எனக்களித்தது. அதனால் பொருளாதார பாரம் இல்லாமல் நான் இரண்டாம் – சுற்று தேர்வுக்கு ஆயத்தமாக முடிந்தது.

ஜூன் 2012ல், இரண்டாம் – சுற்று தேர்வுக்கு ஒரு மாதத்திற்கும் குறைவாக இருந்தபோது, நான் இறுதி ஆயத்தத்திற்காக, அறிவர்.ஜேராக் லீ அவர்களது ஜெபத்தை பெற்றுக்கொண்டேன். பின்பு, எனது ஆச்சர்யத்திற்கு, எனது கற்கும் நிலை முன்னேற்றம் அடைந்தது. மேலும், முன்பை காட்டிலும் என் படிப்பில் சிறந்த கவனம் செலுத்த ஆரம்பித்தேன். தேர்வு எழுதும் தேதி நெருங்க நெருங்க நான் நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரங்கள் முதல் ஒன்பது மணி நேரங்கள், பத்து மணி நேரங்கள் கூட படித்தேன். இதேவேளையில், நான் பொறுமையையும் விடாமுயற்சியையும் கற்று, நிச்சயம் என்னால் முடியும் என்ற நிச்சயம் பெறலானேன். கூடவே, அறிவர்.லீ அவர்களது நன்றாக படிப்பதற்கான திறவுகோல் எனது கற்கும் ஆற்றலை முன்னேற்றுவதில் மிக முக்கிய பங்கு வகித்தது. இதற்கு ஆயத்தம் செய்கையில், எனது பள்ளி பரீட்சைக்கும் நான் கடினமாக படித்தேன். தனி சிறப்பு மாணவிக்கான உதவிதொகையையும் பெற்றேன்.

இறுதியாக, அந்த நாள் வந்தது. பரீட்சை ஜூன் 27 முதல் ஜூன் 30, 2012 வரை நான்கு நாட்களாய் நடைபெற்றன. இரண்டாம் – சுற்று எளிமையான கேள்வி உடையனவாய் இருந்தது. நான் அதிகமாக எழுதினேன். எல்லா பாடத்திலும் பரீட்சைத்தாள் முழுவதையும் நிரப்பினேன். பின்னர், நான் பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன் என்று இரண்டு கனவுகளின் மூலம் நான் அறிந்துகொள்ளும்படி தேவன் செய்தார். ஒரு கனவு என்னவென்றால் எனது பெயரும், பரீட்சையாளர்களின் அட்டை எண்ணும், வெற்றி பெற்றவர்களின் பெயர் பட்டியல் உள்ள சுவரொட்டியில் இருந்தது. மற்றொரு கனவு என்னவென்றால் பரீட்சையில் நான் வெற்றி பெற்றது மூன்று அலைபேசி செய்தி மூலமாய் பெறப்பட்டது.

அக்டோபர் 19, 2012ல், முடிவு வெளி வந்தது. அது நான் பரீட்சையில் தேர்ச்சி பெற்றேன் என்று காண்பித்தது. அந்த க்ஷணத்தில், நான் "தேவனே உமக்கு நன்றி!" என்று கூறினேன். பின் எனக்காக ஜெபித்த அறிவர். லீ அவர்களது முகம் என் மனதில் வந்தது. நவம்பர் 13 அன்று, இந்த செயல்முறையின் இறுதி சுற்றான 3வது நேர்காணல் நடந்தது. பின்னர் நவம்பர் 21 அன்று, வெற்றி பெற்ற தேர்வாளர்களின் இறுதி பட்டியல் வெளிவந்தது. என்னால் என் பெயரை 'ஹான்பிட் லீ' என்று அங்கு தெளிவாக பார்க்க முடிந்தது. ஹாலேலூயா!

## என் பாதையை வழி நடத்திய தேவனுடைய அன்பு

என்னால் இதையெல்லாம் தேவனுடைய அன்பாலும் கிருபையாலும்தான் செய்ய முடிந்தது. 2011 பிற்பகுதி மற்றம் 2012 முற்பகுதியில், எனது மாகாண போதகரும், மேல் மாகாண போதகரும், அவர்களது சந்திப்பின்போது ஜெபத்தின் முக்கியத்துவத்தை நான் அறிந்துணர செய்தார்கள். பிற்பாடு, நான் எனது வேலையின் மத்தியிலும் இணையதளத்தின் மூலமாக தானியேல் ஜெப கூடுகையில் பங்கு பெற்றேன். பின்பு, நான் மிகவும் நம்பிக்கையுள்ளவளானேன். அது கற்கும் திறனை வளர்த்தது.

ஒவ்வொரு நாளும், ஒரு அதிகாரம் வேதம் வாசித்து, ஒரு வசனம் மனப்பாடம் செய்தேன். கூடவே, நான் நீதிமொழிகளையும் வாசித்தேன். அப்படி செய்வதால் வேதாகமத்திலிருந்து ஞானத்தையும் புரிந்து கொள்ளுதலையும் பெற கடினமாய் முயற்சித்தேன், ஒவ்வொரு நாளும் அந்நாளுக்கான அறிவர்.லீ அவர்களது ஜெபத்தை காலையில் பெற்றுக்கொண்டு படிக்க துவங்கினேன். நான் அசதியாய், சோர்வாய் இருக்கும்போது தேவனருளிய மான்மின் பாடல்களை கேட்டேன். பின்பு அசதியும் சோர்வும் அகன்றுபோய் என் மனம் தெளிவாகி விடும். எல்லா நேரமும் நல் ஆரோக்கியத்தை அனுபவித்தேன்.

என்னை சுற்றியுள்ள மக்கள் ஞாயிற்றுக்கிழமை அன்றும் பள்ளிக்கு வந்து காலையிலிருந்து நான் படிக்கும்படி கேட்டனர். ஆனால் பரீட்சை நெருங்கிய போதும்கூட, நான் முழு ஓய்வு நாளையும் ஆசரித்து, ஞாயிறு மாலை ஆராதனைக்கு பின்னர், அறிவர். ஜேராக் லீ அவர்கள் மாணவர்களுக்காக நடத்திய சிறு படைமுயற்சி கூட்டத்திலும் பங்கு பெற்றேன்.

படைமுயற்சி கூட்டத்தில் அறிவர்.லீ அவர்கள், நாங்கள் இந்த பாவம் நிறைந்த இருளான உலகில் எங்கள் விசுவாசத்தை காத்துக்கொள்ளவும், தேவனுடைய பரிசுத்த பிள்ளைகளாக மாறவும் எங்களை எப்போதும் ஊக்கப்படுத்தினார். அவர், ஆரம்ப பள்ளி மாணவர்கள் முதல் கல்லூரி மாணவர்கள் வரை அனைத்து மாணவர்களுக்கும் பரிசு அட்டைகளை கொடுக்க மறந்ததில்லை. மான்மின் மாணவர்கள் அறிவர்.லீ அவர்களது மென்மையான அன்பினால் அசைக்கப்பட்டனர். அது மாணவர்களில் மிக தீவிரமான ஆவிக்குரிய மாற்றத்தை கொண்டு வந்தது. அவருடைய அன்புக்காகவும், வைராக்கியமான உற்சாகத்திற்காகவும் நான் நன்றி செலுத்துகிறேன். "சட்ட நிபுணர் தேர்வில் தேர்ச்சி பெற்று தலைமை போதகரை பிரியப்படுத்துவேன்!"

மார்ச் 2012 முதல், நான் கொரிய சட்ட ஆய்வு மற்றும் பயிற்சி கூடத்தில் நுழைந்து, சட்ட சமுதாயத்தில் ஒரு நிபுணராக மாறுவதற்கு இரண்டு வருடம் பயிற்சி எடுக்க இருக்கிறேன். தலைமை போதகர் மீது நீதிபதி அங்கியை போடுவது போன்ற கனா நான் கண்டேன். அதை பல முறை கற்பனை செய்திருக்கிறேன்.

நான் அதிகாரப்பூர்வமாக வேலைக்கு முதலாவது அமரும்படிக்கு, இலக்குடன் கடுமையாய் படிப்பேன், திருச்சபைக்கும் மேய்ப்பருக்கும் பெலத்தின் ஆதாரமாய் மாறுவேன். எல்லா ஸ்தோத்திரங்களையும் மகிமையையும் திரித்துவ தேவனுக்கு செலுத்துகிறேன்.

GCN
GLOBAL • CHRISTIAN • NETWORK
Tel: 044-26172471
www.gcntv.org
e-mail: gcntvindia@gmail.com

MIS
Manmin International Seminary
Tel: 044-26172471
www.manminseminary.org
e-mail: indiamis@gmail.com

Chennai Manmin Holiness Church
15D/41, Ponnan Kinaru Street,
Villivakkam, Chennai - 600 049
PH: 044-26172471,

